## மருத்துவ தகவல்

அனைத்து மருத்துவ தகவல்களும் உங்களுக்கும் நோய் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளும் சிகிச்சை நிலைய மருத்துவருக்கும் இடையே மிகவும் இரகசியமாக இருக்கும். சிகிச்சை நிலைய மருத்துவர், தேவைப்பட்டால் உங்களை பிற மருத்துவ சேவைகளுக்கு பரிந்துரை செய்வார். அல்லது உங்களை மீண்டும் சிகிச்சை நிலையத்திற்கு மேலதிக மருத்துவ ஆலோசனைக்கு வருமாறு கேட்டுக் கொள்வார். பிற மருத்துவமனைகளிற்கான பரிந்துரைகள் உங்கள் அனுமதியுடன் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

சிகிச்சை நிலைய மருத்துவர் நீங்கள் இலவச நோய் கண்டறிவதற்கான பரிசோதனைகளிற்கான மருத்துவ ஆலோசனைகளை பெற தொடங்கி விட்டதாக நியூசிலாந்து குடியேற்றத் திணைக்களத்தின் அகதிகள் அந்தஸ்திற்கான பிரிவிற்கு தெரியப்படுத்துவார். உங்கள் மருத்துவ தகவல்கள் அவர்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட மாட்டாது.

## மேலதிக மருத்துவ கவனிப்பு

இயன்ற அளவு விரைவாக நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள ஒரு மருத்துவரை குடும்ப மருத்துவராக பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

சிகிச்சை நிலைய மருத்துவர் உங்களைப்பற்றிய மருத்துவ தகவல்களை அனைத்து பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றதும் உங்களுக்கு அனுப்பி வைப்பார். இவற்றை நீங்கள் உங்கள் குடும்ப மருத்துவரிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.

உங்கள் மருத்துவ பதிவேடுகளை தயவு செய்து கவனமாக வைத்திருக்கவும். இது உங்கள் மருத்துவ தகவல்கள் கொண்ட ஒரு முக்கியமான ஆவணம் ஆகும்.

சிகிச்சை நிலைய மருத்துவர் உங்களை மேலதிக சிகிச்சைக்காக பொது மருத்துவமனைக்கு அனுப்பலாம். அவ்வாறு செய்கையில் உங்கள் முகவரியை சிகிச்சை மருத்துவமனை, பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும். நீங்கள் பொது மருத்துவமனை மருத்துவரை சந்திப்பதற்கான திகதியையும் நேரத்தையும் கடிதம் மூலம் அறிவிக்கும்.

இந்த குறிப்பிட்ட நேரத்தில் நீங்கள் பொது மருத்துவமனைக்கு செல்ல வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

மிகவும் அவசரமான மருத்துவ கவனிப்பு தேவைப்பட்டால் ஒழிய, பொது மருத்துவமனையில் உங்களுக்கு நேரம் ஒதுக்கப்படுவதற்கு நீண்ட நாள் காத்திருக்க வேண்டியிருக்கும் என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளவும். நீங்கள் பொது மருத்துவமனை மருத்துவரை பார்ப்பதற்கு பல மாதங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம்.

**Auckland Regional Public Health Service**
Rātonga Hauora ā Iwi o Tamaki Makaurau
Working with the people of Auckland, Counties Manukau and Waitemata

**Auckland Regional Public Health Service**
Rātonga Hauora ā Iwi o Tamaki Makaurau
Working with the people of Auckland, Counties Manukau and Waitemata

# அகதிகளின் நோய் கண்டறியும் பரிசோதனை சேவை

பொது சுகாதார சேவை வழங்கும் இலவச நோய் கண்டறிவதற்கான பரிசோதனையில் பங்கேற்குமாறு வலுவாக அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் இது கட்டாயமல்ல. இந்த பரிசோதனை, நியூசிலாந்து குடியேற்றத்திற்கான மருத்துவ பரிசோதனை அல்ல. (படிவம் **INZ 1007**).

**Refugee Screening—Tamil**
**June 2011**

நோய் கண்டறிவதற்கான பரிசோதனையை சிகிச்சை நிலைய மருத்துவர் மேற்கொள்வார். எந்த வகை நோய் கண்டறிவதற்கான சுகாதாரப் பரிசோதனை உங்களுக்கு தேவை என்று ஆலோசனை வழங்குவார். அவசியம் ஏற்பட்டால் உங்களை பிற சுகாதார சேவைகளுக்கும் பரிந்துரைப்பார்.

பரிசோதனை செய்யும் சிகிச்சை நிலையத்திற்கு நீங்கள் வருவதற்கு முன்னதாக முன் அனுமதி பெறவேண்டும். உங்களின் சந்திப்பிற்கான முன் அனுமதியைபெற (09) 276 6719 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவை என்றால், பரிசோதனை செய்யும் சிகிச்சை நிலையத்திற்கு முன் கூட்டியே தெரிவிக்கவும். நீங்கள் ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளர் தேவை என்று கோரலாம். உங்கள் மொழியின் குறிப்பிட்ட பேச்சு வழக்கில் பரிச்சையமுள்ள மொழிபெயர்ப்பாளர் வேண்டும் என்பதையும் நீங்கள் தெரிவிக்கலாம். மொழிபெயர்ப்பாளர்கள் இலவசமாக வழங்கப்படுவார்கள்.

**சுகாதார பரிசோதனைகள்**

உங்கள் ஆரோக்கியத்தை பரிசோதிப்பதற்காக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனை முடிவுகள் எதிர்மாறாக இருப்பின் அதற்குரிய மருந்துகளினை பரிசோதனை செய்யும் சிகிச்சை நிலையம் பரிந்துரைக்கும். அல்லது நீங்கள் பொது மருத்துவமனைக்கு செல்வதற்கு பரிந்துரைக்கப்படுவீர்கள். அல்லது உங்கள் குடும்ப மருத்துவரிடம் சிகிச்சையை தொடர்வதற்காக அனுப்பி வைக்கப்படுவீர்கள்.

நீங்கள் சிகிச்சை நிலையத்திற்கு வருகையில் தயவு செய்து அங்குள்ள மருத்துவரிடம் கீழ்கண்டவற்றை தெரிவிக்கவும்.

- நீங்கள் ஏதேனும் உடல்நலக்குறைவு அல்லது நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா
- நீங்கள் ஏதேனும் மருந்தினை உட்கொள்கிறீர்களா (*தயவு செய்து மருந்தினை கொண்டு வரவும்*)
- உங்கள் ஆரோக்கியம் பற்றிய கவலைகள் இருக்கிறதா
- உங்களிடம் ஏதேனும் மருத்துவ பதிவேடுகள் அல்லது எக்ஸ்-ரே படங்கள் உள்ளனவா (*தயவு செய்து கொண்டு வரவும்*)
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா அல்லது கர்ப்பமடையக்கூடும் என்று நினைக்கிறீர்களா

**நோய் கண்டறிவதற்கான பரிசோதனை**

சிகிச்சை நிலைய மருத்துவர் உங்கள் மருத்துவ வரலாற்றை கேட்டறிவார். உங்கள் உடலை முழுமையாக பரிசோதிப்பார். சில சுகாதார பரிசோதனைகளுக்கான ஆய்வக படிவங்கள் உங்களுக்கு வழங்கப்படலாம். பரிசோதனைகள் பொதுசன பயன்பாட்டுக்குரிய பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும்.

**சுகாதார பரிசோதனைகள்**

- **குருதிப் பரிசோதனை:**

உங்களுக்கு ரத்த சோகை, நோய் கிருமிகளின் தொற்று, வியாதிகள் ஏதும் இருக்கிறதா என்பதை கண்டறியவும், சில அத்தியாவசிய கனிப்பொருட்கள் மற்றும் வைட்டமின்கள் உடலில் தேவைப்படும் அளவிற்கு உள்ளனவா என்பதை கண்டறியவும் இரத்தம் எடுக்கப்படும். இந்த குருதிப் பரிசோதனை பொதுசன பயன்பாட்டுக்குரிய பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும்.

- **சிறுநீர் பரிசோதனை**

நோய் கிருமிகளின் தொற்று இருக்கிறதா என்பதை கண்டறிய சிறுநீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும்

- **மல பரிசோதனை**

ஒட்டுண்ணிகள் மற்றும் பிற கிருமிகளின் தொற்றுக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா என்பதை கண்டறிய மலப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். நாளொன்றிற்கு ஒரு மாதிரி வீதம் மூன்று நாட்களுக்கு மலத்தின் மாதிரிகள் தேவை. இந்த மாதிரிகள் பொதுசன பயன்பாட்டுக்குரிய பரிசோதனை நிலையத்திற்கு வழங்கப்பட வேண்டும். சில நேரங்களில் மேலும் மாதிரிகள் தேவைப்படலாம்.

- **காசநோயிற்கான (டி.பி.) பரிசோதனை**

16 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தோலில் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படலாம். இந்த பரிசோதனை மன்டோக்ஸ் பரிசோதனை என்று அழைக்கப்படுகிறது. இது காசநோய் தொற்று இருக்கிறதா என்று பரிசோதனை செய்வதற்காக மேற்கொள்ளப்படும். இந்த பரிசோதனையில் தொற்று இருப்பது தெரியவந்தால், குழந்தைகள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காவோ அல்லது மேலதிக பரிசோதனைகளுக்காகவோ பரிந்துரைக்கப்படுவர்.

- **மார்பு பகுதி எக்ஸ்-ரே**

11 வயதிற்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிப்பெண்கள் தவிர, அனைவரும் காசநோய் பரிசோதனைக்காக மார்பு பகுதி எக்ஸ்-ரே பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். கிரீன்லேன் மருத்துவமனை, மிடில்மோர் மருத்துவமனை, அல்லது நார்த் ஷோர் மருத்துவமனையில் இந்த எக்ஸ்-ரே எடுக்கப்படும்.

**தயவு செய்து கவனிக்க:**

நோய் கண்டறிவதற்கான பரிசோதனைக்கு நீங்கள் வரும்போது மருத்துவர் குறிப்பிடும் சுகாதார பரிசோதனைகளை நீங்கள் நிறைவேற்றவேண்டும் என்பது உங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானதாகும்.